# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2087/27 - 2018 සැප්තැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.06

*2087/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 6/2017.*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் பிரிவுகள் 13 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 117 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சர்.

கொழும்பு,
*2018, ஓகத்து 28.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் குடியியல் வான்செலவு (வானூர்தி நிலையங்களை வகுப்பாக்கஞ் செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதற்குப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபையானது இலங்கையிலுள்ள ஏதேனும் வானூர்தி நிலையத்தை பின்வருமாறு வகுப்பாக்கம் செய்யலாம் :-

(அ) அத்தகைய வானூர்தி நிலையத்தை வடிவமைப்பின் மீதான அடிப்படை :

| குறியீடு | வடிவமைப்பு வகை |
|---|---|
| A1 | தரை வழி வானூர்தி நிலையம் |
| A2 | நீர் வழி வானூர்தி நிலையம் |
| A3 | உலங்கு வானூர்தி நிலையம் |
| A4 | குறுகிய எழுநிலை மற்றும் தரையிறங்கும் (STOL) நிலையம் |

1A - PG 4201 — 507 (2018/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) அத்தகைய வானூர்தி நிலையத்தின் பயன்பாட்டு வகை மீதான அடிப்படை :

| குறியீடு | பயன்பாட்டுக்கான வகை |
|---|---|
| B1 | சர்வதேச வானூர்தி நிலையம் |
| B2 | உள்நாட்டு வானூர்தி நிலையம் |

(இ) அத்தகைய வானூர்தி நிலையத்தின் பயன்பாட்டு நோக்கத்தின் மீதான அடிப்படை :

| குறியீடு | பயன்பாட்டுக்கான நோக்கம் |
|---|---|
| C1 | அரசாங்க வானூர்தி நிலையம் |
| C2 | தனியார் வானூர்தி நிலையம் |

(ஈ) அத்தகைய வானூர்தி நிலையத்தின் பயன்பாட்டுக்கான நோக்கெல்லை மீதான அடிப்படை :

| குறியீடு | பயன்பாட்டுக்கான நோக்கம் | ஆண்டொன்றுக்கான பறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| D1 | மிகை அடர்த்தி வானூர்தி நிலையம் | 1,00,000 அல்லது அதற்குமேல் |
| D2 | குறை அடர்த்தி வானூர்தி நிலையம் | 1,00,000 இற்கு குறைவானது |

(உ) அத்தகைய வானூர்தி நிலையத்தின் தொழிற்பாட்டு நிபந்தனைகள் மீதான அடிப்படை :

| குறியீடு | தொழிற்படும் மணித்தியாலங்கள் | ஏற்புடையற்பாலதான விமான விதிகள் |
|---|---|---|
| E1 | பகல் மற்றும் இரவு | கட்புல பறப்பு விதிகள் (VFR) அத்துடன் சாதன பறப்பு விதிகள் (IFR) |
| E2 | | கட்புல பறப்பு விதிகள் (VFR) |
| E3 | பகல் | கட்புல பறப்பு விதிகள் (VFR) அத்துடன் சாதன பறப்பு விதிகள் (IFR) |
| E4 | | கட்புல பறப்பு விதிகள் (VFR) |

(ஊ) அத்தகைய வானூர்தி நிலையத்திற்காக வழங்கப்பட்ட அணுகுகை மற்றும் தரையிறக்க உபகரணம் மீதான அடிப்படை :

| குறியீடு | தரையிறக்கல் உபகரணம் | அணுகுகை மற்றும் தரையிறக்க வகை |
|---|---|---|
| F1 | சாதனம் | துல்லியம் |
| F2 | | துல்லியம் சாராதது |
| F3 | சாதனம் சாராதது | கட்புலனானது |

3. வானூர்தி நிலையத்தினைத் துல்லியமாக வகுப்பாக்கஞ் செய்யும் நோக்கத்திற்காக, 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) தொடக்கம் (ஊ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வானூர்தி நிலையத்தை வகுப்பாக்கஞ் செய்தல் குறியீடுகள் 2 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வானூர்தி நிலையத்தின் வடிவமைப்பு வகைக்கு தோதான குறியீட்டுடன் தொடர்ச்சியாக பயன்படுத்தலாம் என்பதுடன் பின்சாய்வுக் கோடொன்றினால் தனிவேறாக்கப்பட்ட உப வகுப்பாக்கஞ் செய்தல் குறியீட்டினால் பின்பற்றவும்படலாம்.

4. வானூர்தி நிலையமொன்றின் ஓடுபாதை ஒன்று சமவாயத்திற்கான "வானூர்தி நிலையங்கள்" 14 ஆம் பின்னிணைப்பில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க வகுப்பாக்கஞ் செய்யப்படலாம். இது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 120 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட 30 ஆம் இலக்க, அமுல்படுத்தும் நியமங்களின் நியதிகளின்படி குடியியல் வான்செலவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உள்நாட்டில் அமுல்படுத்தலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி -

"வானூர்தி நிலையம்" ஆனது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபை எனப் பொருள்படும் ;

"சமவாயம்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்டவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபையின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

09-462

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.